மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: **திரு.T. கோகுல கிருஷ்ணன் B.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

**2022**ம் வருடம் **ஜூலை** மாதம் **06**ம் நாள் **புதன்** கிழமை

**சுபகிருது** ஆண்டு **ஆனி** மாதம் **22**ம் நாள்

**CNR No. TNMD19000172-2015**

**I.A . No. 235/2022**

**in**

**O.S. No. 48/2015**

1. வெள்ளையம்மாள்
2. இராமநாதன்
3. இராணி .... மனுதாரர்கள்/வாதிகள்

//எதிர்//

ராஜேஸ்வரி

..... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு **14.06.2022**ம்தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் **திரு.V.பழனி** அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.M. கோகுல்நாத்** அவர்கள் ஆஜராகியும், கடந்த **22.06.2022**ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகளால், மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் காலதாமதமாக தாக்கல் செய்வதை மன்னித்து ஏற்றுக்கொள்ள அனுமதி கோரி கட்டளை 7 விதி 14 உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:**

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவார்கள் என்றும், அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக தாவா சொத்தை பொறுத்து வலியுறுத்துக் கட்டளை மற்றும்

நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கு பிராதுடன் தாவா சொத்திற்கு வரிவகையறாக்கள் செலுத்தவும் இதர அத்தியாவசிய தேவைகளுக்காக அதன் அசல் ஆவணம் தாக்கல் செய்யப்படாமல் போய் விட்டது என்றும், எனவே, இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் காலதாமதமாக தாக்கல் செய்வதை மன்னித்து மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டியது அவசியமானது என்றும், இம்மனுவை அனுமதிப்பதில் எதிர்மனுதாரருக்கு எவ்வித ஆட்சேபணையும் இருக்க முடியாது என்றும், இம்மனு அனுமதிக்கப்படாவிட்டால் மனுதாரர்கள்/வாதிகளுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டு விடும் என்றும், எனவே மனு அனுமதிக்கப்படவேண்டுமென்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு எதிர் மனுஉரையின் சுருக்கம்:**

எதிர்மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார் என்றும், அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி-1ல் முதல் விசாரணை, குறுக்கு விசாரணை ஏற்கனவே முடிவடைந்துள்ள நிலையில், மேற்படி விசாரணையின் பொழுது, வாதிகள் தரப்பில் இம்மனுவில் குறிப்பிடப்பட்ட பட்டாவும் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்திற்கான புகைப்படம் மற்றும் சிடி தற்பொழுது தாக்கல் செய்வது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், ஏனெனில் தாவா சொத்தை பார்வையிட்டு அதனுடைய அமைப்பு மற்றும் அமைவிடம் குறித்து பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்யக்கோரி மனுதாரர்கள்/வாதிகளால் மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுவும் அனுமதிக்கப்பட்டு, அதனடிப்படையில் வழக்கறிஞர் ஆணையரும் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பித்துள்ளார் என்றும், அந்த அறிக்கை சம்பந்தமாக வாதி தரப்பில் பல்வேறு கேள்விகள் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையில் கேட்கப்பட்டுள்ள நிலையில், தற்போது, தாவா சொத்தின் புகைப்படம் அதன் சிடியை தாக்கல் செய்யவேண்டிய அவசியம் ஏதுமில்லை என்றும், அசல் வழக்கில் வாதிகள் தரப்பு கூடுதல் விசாரணைக்காக உள்ள நிலையில், இம்மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் எந்த சாட்சி மூலமாக தாக்கல் செய்யப்பட இருக்கின்றன என்பது தொடர்பான விபரங்கள் எதுவும் சொல்லப்படவில்லை என்றும், தாவா வழக்கில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பு கிடைக்காது என்பதால் அசல் வழக்கு விசாரணையை திசை திருப்ப வேண்டுமென்ற எண்ணத்துடன் மனுதாரர்கள்/வாதிகளால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் எதிர்மனு உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால்,

இறுதியாக,

இந்த மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**தீர்வு**

**5**) இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதுரைகள் மற்றும் வழக்கு கோப்புகள் சமூகம் நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

(i) கட்டளை 7 விதி 14(1) மற்றும் பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் மனுதாரர்கள்/வாதிகளால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட தாவா சொத்திற்கான பட்டா மற்றும் தாவா சொத்தின் புகைப்படம் மற்றும் அதற்கான குறுந்தகடு பிராதுடன் தாக்கல் செய்யாமல் காலதாமதமாக தாக்கல் செய்வதை மன்னித்து மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்திட அனுமதித்திட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

6) இம்மனுவின் அசல் வழக்கானது, வாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக நிலுவையில் இருந்து வரும் நிலையில், இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வழக்கு ஆவணங்களை பார்வையிட்ட வகையில் சமூக நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**7)** எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்மனு உரையினை சமூகம் நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் சமூகம் நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டதில், 1வது ஆவணமாகிய மனைவாரி தோராயபட்டாவானது வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு பெறப்பட்ட வருவாய்துறை ஆவணமாக உள்ளது. மேற்படி ஆவணங்களின் உண்மைத்தன்மை மற்றும் சாட்சியமாக ஏற்று அனுமதிக்கக்கூடிய தன்மை ஆகிய வற்றை அசல் வழக்கில் இருதரப்பு சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் இறுதியில் மட்டுமே தீர்வு காண இயலும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

8) மேலும், குறியீடு செய்யக்கூடிய ஆவணங்களின் ஆட்சேபணைகளை பொறுத்தவரை எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் சாட்சி விசாரணையில், குறுக்கு விசாரணை மூலம் தெளிவுப்படுத்திக்கொள்ள வாய்ப்பு உள்ளது.

9) ஆகவே, இந்த மனு அனுமதிக்கப்படுவதினால், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு அசல் வழக்கில் எந்த வகையிலும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை என்று அறிந்து கொள்ள முடிகின்றது. எனவே அசல் வழக்கின் தன்மைக்கருதியும், இம்மனுவின் தன்மைக்கருதியும், நீதியின் நலன் கருதியும் இம்மனு அனுமதித்து உத்தரவு பகரப்படுகிறது.

இறுதியாக,

இந்த மனு செலவு தொகையின்றி அனுமதிக்கப்பட்டு, உத்தரவு பகரப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரிடையாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2022ம் ஆண்டு ஜூலை மாதம் 06ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்.T.கோகுலகிருஷ்ணன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

**மனுதாரார் தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்கள்:** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்கள்:** இல்லை.

(ஓம்.T.கோகுலகிருஷ்ணன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.